தேதி: 23-03-2023

வாக்குமூலம்

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2, திருவைகுண்டம்

வழக்கு எண். CC. 746/2022

வழக்கு சாட்சி எண். PW 6

| | |
|---|---|
| பெயர்: சுந்தரபாண்டியன் | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுகா: | வயது: |

( எதிரிகள் 1 ஆஜர். எதிரி 2 ஆஜர் இல்லை. இரண்டாம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு -317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை :

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

1. நான் தற்போது கால்வாயில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். கடந்த வருடம் மாலை 5.00 மணி அளவில் அ.சா.1 வீட்டின் அருகில் வைத்து போலீசார் விசாரித்து கொண்டு இருந்தார்கள்.

2. என்னை சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் நான் அதில் கையொப்பம் செய்தேன். பார்வை மகஜர் **அ.சா.ஆ.3** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

3. என்னிடம் எந்த தேதி, மாதம், வருடத்தில் எங்கு வைத்து கையொப்பம் வாங்கினார்கள் என்றால் 16.02.2022 ம் தேதியில் செய்துங்கநல்லூர் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் வாங்கினார்கள். அந்த பார்வை

மகஜரில் என்ன எழுதி இருந்தது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

மறு விசாரனை இல்லை.

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /–
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்டம்.